**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை: திருமதி. ஆ. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், ஐப்பசி 20 ம் நாள்

**இடைக்கால மனு எண். 636/2025**
**இன்**
**அ.வ.எண்.90/2016**

1. கோவிந்தசாமி கவுண்டர் (இறப்பு)
2. சிவக்குமார்
3. கலாமணி
4. ராகவி
5. பூஜா
6. சரஸ்வதி

..மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1. K.பழனிச்சாமி
2. R.வரதராஜன்
3. S.சுப்பிரமணியம்
4. கிட்டன் (எ) மாறன்

..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 17.10.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சின்னசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜகோபால் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, மனு ஆவணங்களை நன்கு

பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

மனுதாரர்கள் அசல் வழக்குக்கான பதில் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்** :

**2.1** அசல் வழக்கானது விளம்புகை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு 14.07.2025 ம் தேதியன்று நீக்கறவு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஒரு கருப்பன் என்பவரிடம் இருந்த 1.58 ஏக்கர் பூமியை 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாகவும், 25.08.1958 ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலம் கருப்பனுக்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளார்கள்.

**2.2** கருப்பன் மற்றும் அவரது வாரிசுகள் மற்றும் இதர சில நபர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட முழு சொத்தையும் காலம் சென்ற 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரருக்கு 21.06.1972 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். கிரையம் பெற்ற தேதி முதல் க.ச.எண்.110 ல் உள்ள 3.18 ஏக்கர் விஸ்தீரனம் முழுவதிலும் 2ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் கோவிந்தசாமி மற்றும் அவரது சகோதரர் உதய கவுண்டர் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தார்.

**2.3** கடந்த 12.06.2007ம் தேதியிட்ட பொது அதிகார பத்திரம் 2ம் மனுதாரருக்கு 29.08.2005ம் தேதியன்று தான் கிடைக்கப்பெற்றது. அதன் மூலம் அதில் குறிப்பிட்டுள்ள கருப்பன் 25.08.1958ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கருப்ப சக்கிலி அல்ல என்பது தெரியவந்தது. 4ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது முகவர் பழனிசாமி ஆகிறோர் சேர்ந்து மேற்படி பொது அதிகார பத்திரத்தை பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி ஆள் மாறாட்டம் செய்துள்ளது தெரிய வந்தது. மேற்படி விவராங்கள் வழக்குரையில் சொல்லப்பட்டதால் அது குறித்து பதில் வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

**3.1** மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லதக்கதல்ல. மனுதாரர்களின் மனுவின் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சட்டத்தின் முன்னே நிலை நிற்கதக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் ஒத்துக்கொண்டுள்ள சங்கதிகள் தவிர, ஏனைய மனுச்சங்கதிகள் அனைத்தையும் மனுதாரர்களே ஆவண ஆதாரபூர்வமாக நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

**3.2** மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் முறையாக கிரையம் பெற்றுள்ளார். அதனை மறைத்து மனுதாரர்கள் பொய் சங்கதிகள் கூறி சொத்தினை அபகரிக்கும் நோக்கில் தாக்கல் செய்துள்ள இம்மனு தேவையற்ற ஒன்றாகும்.

**3.3** மேலும் வழக்கில் தற்போது வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் ஏற்கனவே வாதி தரப்பில் வழக்குரையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்காக எதிர்வழக்குரையும் இந்த எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் வாதி தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரை தேவையற்ற ஒன்றாகும். மேற்படி மனுதாரரின் மனு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**5**. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**6**. **<u>தீர்வு</u>** :

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து பொது அதிகாரப்பத்திரம் ஆள்மாறாட்டம் செய்து ஏற்பட்டுள்ளது குறித்து பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமான ஒன்று என்பதாலும், அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கவில்லை என்பதாலும் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், விளம்புகை மற்றும் நிரத்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு 14.07.2025 ம் தேதியன்று நீக்கறவு செய்யப்பட்டு, அன்றையதினம் 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை அசல் வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து பதில் வழக்குரை தாக்கல் செய்வதற்கு மனுதாரர்கள்/வாதிகளுக்கு வாய்ப்பு அளித்தும் அதனை தாக்கல் செய்யவில்லை.

**6.3** அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதையும், பொது அதிகாரம் பத்திரம் ஆள்மாறாட்டம் செய்து போலியாக உருவாக்கப்பட்டதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட காரணத்தை கருத்தில் கொண்டும், அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்காததை கருதியும், இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.06 18:11:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.06 18:10:54 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.